**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 20-10-2023**

**விருதுநகர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-10-20 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-10-21 | 2023-10-22 | 2023-10-23 | 2023-10-24 | 2023-10-25 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 10.0 | 8.0 | 15.0 | 25.0 | 15.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 34.0 | 34.0 | 34.0 | 33.0 | 33.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 24.0 | 24.0 | 24.0 | 23.0 | 23.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 78 | 78 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 60 | 60 | 60 | 58 | 58 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 8 | 8 | 8 | 6 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 90 | 90 | 90 | 110 | 110 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 6 | 6 | 6 | 5 | 5 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் நாட்களில் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களில் மிதமான மழை என்று எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33.0°C முதல் 34.0°C ஆகவும், குறைந்தபட்ச 23.0°C முதல் 24.0°C காலைநேர காற்றின் ஈரப்பதம் 78 முதல் 80 சதவிகிதமாகவும், மாலை நேர காற்றின் ஈரப்பதம் 58 முதல் 60 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. அடுத்த 24 மணி நேரகாற்றின் வேகம் மணிக்கு 6.0 முதல் 8.0 கி.மீ வரை இருக்கும் என்றும் காற்றின் திசை கிழக்கு மற்றும் தென்கிழக்கு திசையில் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## பொது ஆலோசனை:

| |
|---|
| அடுத்த ஐந்து நாட்களில் மிதமான மழை பெய்யும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் பாசனத்தை ஒத்திவைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். போதுமான வடிகால் வசதிகளை ஏற்படுத்தவும். விவசாயிகள் மருந்து தெளிப்பதைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் அக்டோபர் 25 முதல் அக்டோபர் 31 வரை இயல்பை விட அதிகமான மழை, அதிகபட்ச வெப்பநிலை மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாக இருக்கும். |

## குறுஞ்செய்தி :

| |
|---|
| மிதமான மழை. எனவே, நீர் வழித்தடங்கள், பண்ணை குட்டைகள் மற்றும் பிற நீர்நிலைகளை சீரமைத்து மழை நீரை திறம்பட பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படுகிறார்கள். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| மக்காச்சோளம் | மக்காசோளம் பயிரிடும் விவசாயிகளின் கவனத்திற்கு மக்காச்சோள பயிரில் படைப்புழுவின் தாக்குதலை கட்டுப்படுத்த குளோர்ஆன்ரனிலிபுரோல் 18.5% SC@ 0.4 மி / லிட்டர் தண்ணீர் (அல்லது ) ஃபுளூபென்டமைடு 480 SC @0.4 மி / லிட்டர் தண்ணீர் ஆகிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றை கை தெளிப்பான் கொண்டு குருத்துப் பகுதியில் நன்கு படும்படி தெளிக்க வேண்டும். |
| நிலக்கடலை | சுருள் பூச்சி: அப்ரோஎரிமா மோடிசெலா தாக்குதலின் அறிகுறிகள்: 1.புழு இரண்டு அல்லது மூன்று இலைகளை ஒன்றாக பிணைத்து விடும்.2. புழு இலையின் திசுக்களுக்கிடையே ஊடுருவிச் சென்று பச்சயத்தைச் சுரண்டி உண்ணும். 3. தாக்கப்பட்ட இலைகள் காய்ந்து விடும். 4. சேதம் அதிகமாகும் நிலையில் தாக்கப்பட்ட பயிர்கள் தீயினால் எரிக்கப்பட்டது போல் காணப்படும். பூச்சியின் அடையாளம்: 1.முட்டை வெள்ளை நிறம் உடையது, பெண் அந்து பூச்சி இலையின் அடிப்புறத்தில் முட்டையைக் குவியல்களாக இடும்.2. புழு: பச்சை நிறமாகவும், கருமை நிறத்தலையையும் கொண்டிருக்கும்.3. அந்துப் பூச்சி: பழுப்பு நிறத்தில் இருக்கும், முன்னறிக்கையில் வெண்ணிற புள்ளிகளைக் கொண்டிருக்கும். கட்டுப்படுத்தும் முறை: பொருளாதார சேத நிலை: 1 புழு/ மீட்டர் வரிசை 1. விளக்குக் கவர்ச்சி பொறியை எக்டருக்கு 12 வீதம் |

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| | அமைத்து அந்துப் பூச்சியை கவர்ந்து அளிக்கலாம். பின்வரும் ஏதேனும் ஒரு பூச்சிக்கொல்லியை தெளிக்கவும்.1. ETL: 1 லார்வாக்கள்/மீட்டர் வரிசை @12/h ஒளி பொறிகளை அமைக்கவும். மாலத்தையான் 50 EC 1.25மி.லி /ஹெக்டர் என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். |
| நிலக்கடலை | நிலக்கடலை- முந்தைய டிக்கா இலைப்புள்ளி நோய்: அறிகுறிகள்: நோய்க்காரணி: செர்கோஸ்போரா அராக்கிடிகோலா : அறிகுறிகள்: 1. இலையில் செம்பழுப்பு நிற,வட்ட வடிவில் புள்ளிகள் காணப்படும்.2. இந்த புள்ளியைச் சுற்றிலும் வட்ட வடிவில் மஞ்சள் நிற வளையம் காணப்படும். வாழ்க்கை சுழற்சி: இந்நோய்க்காரணி விதைகள் மற்றும் நோய்ப்பட்ட செடிகள் மூலம் பரவும். மேலும் காற்று மற்றும் மழை மூலமாகவும் பரவும். மேலாண்மை: ஊடு பயிராக பாசிப்பயறு 4:1 என்ற விகிதத்தில் (4 வரிசை நிலக்கடலை +1 வரிசை பாசிப்பயறு) வளர்க்கலாம்.2. நோயைத் தாங்கி வளரும் இரகங்களான TMV6, மற்றும் TMV10 வளர்க்கலாம் 3.குளோரோதலோனில்(0.2%) என்ற அளவில் ஒட்டும் திரவம் சேர்த்து தெளிக்கவும். நோயின் தீவிரம் அதிகமாகும் போது 15 நாட்கள் இடைவெளியில்,இரண்டாவது முறை தெளிக்கலாம். |

**தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை:**

| தோட்டக்கலை | தோட்டக்கலை குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| கஸ்டார்ட் ஆப்பிள் | சீதாப்பழம் ஒரு காலநிலை சார்ந்த பழமாகும், மேலும் பழம்தரும் பருவம் செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களுக்கு இடையில் வரும். 1. தரமான பழத்திற்கான முதிர்வுக் குறியீடுகள் பச்சை நிறத்தில் இருந்து அதன் மாறுபட்ட நிழலுக்கு நிறத்தை மாற்றுவதாகும். 2. முதிர்ச்சியடையாத பழங்கள் பழுக்காது மற்றும் நிறம் மாறாது. 3. முதிர்ச்சியின் அறிகுறி நுனி மொட்டு, குறிப்பிட்ட தரத்தில் மற்றும் வளமிகுந்த வீக்கம் மூலம் கவனிக்கப்படுகிறது.4. பழங்கள் செதில்களாக அல்லது பகுதி பாலேடு வெண்மையாக மாறும். |

**உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை:**

| உயிருள்ள விலங்குகள் | உயிருள்ள விலங்குகள் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| வெள்ளாடு | ஆட்டுக்கொல்லி நோய் : இந்நோய் ஒரு வைரஸ் கிருமியால் ஏற்படுகிறது. அறிகுறிகள் : 1. 3-5 நாட்களுக்கு அதிக காய்ச்சல், மூக்கில் சளி வடிதல், வாயின் உட்புறத்தில் ஈறுகள் மற்றும் நாக்கில் புண்கள் ஏற்படும்.துர்நாற்றத்துடன் கூடிய கழிச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும். 2. எளிதில் தொற்றக்கூடிய இந்நோய் பாதிக்கப்பட்ட ஆடுகளின் சளி, உமிழ்நீர், சிறுநீர் மூலம் மற்ற ஆடுகளுக்கு பரவும். தடுப்புமுறைகள்: 1. நோய் பாதித்த ஆடுகளை தனியாக வைத்து பராமரிக்க வேண்டும்.2. வாய்புண்ணிற்கு கிளிசரின் மருந்தை தினமும் தடவலாம். 3. பிகாம்ப்ளக்ஸ் சத்து மருந்துகளை கொடுக்கலாம். 4. கால்நடை மருத்துவரின் பரிந்துரையின்படி நோய்எதிர்உயிரி மருந்துகளை செலுத்தவேண்டும். இந்நோய்க்கான தடுப்பூசியை ஆண்டுக்கு ஒருமுறை குறிப்பாக 3-6 மாத வயத்திற்குட்பட்ட குட்டிகளுக்கு ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் போட வேண்டும். |

**பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை:**

| பிற ( மண்/ நில தயாரிப்பு) | பிற ( மண்/ நில தயாரிப்பு) குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| தாவர பாதுகாப்பு | நாற்றழுகல் நோய்: தக்காளி, மிளகாய் மற்றும் கத்தரிக்காய் போன்ற காய்கறி பயிர்களின் இளம்பயிரை நாற்றழுகல் நோய் தாக்குகிறது. அறிகுறிகள்: இந்நோய் தாக்கப்பட்ட செடியின் தண்டுப் பகுதிகள் அளவில் சுருங்கி, செடிகள் தலைகீழாக கவிழ்ந்த நிலையில் இருக்கும். நோய் மேலாண்மை: 1. நாற்றங்காலில் தண்ணீர் தேங்காதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். 2. மேட்டுப்பாத்தி நாற்றங்கால் அமைக்க வேண்டும்.3.நாற்றங்கால் பகுதியில் விதைப்பதற்கு முன்பு, கடைசி உழவுக்கு பின் டிரைக்கோடெர்மா விரிடி யை நன்கு மக்கிய தொழு உரத்துடன் கலந்து (2.5 கிலோ +50 கிலோ தொழு உரம்) தூவி பின் விதைப்பு எடுக்கவேண்டும். 4. பாதிக்கப்பட்ட செடிகளின் தூர்பாகம் நன்கு நனையும்படி மெட்டாலக்ஸீல் என்ற மருந்தினை (0.1%) ஊற்றலாம். |